**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 6/2022 Date: 16.06.2026.**

**(DW1)- ராஜேந்திரன்**

<u>வாதி தரப்பு குறுக்கு **விசாரணை தொடர்ச்சி**</u>

1. இந்த வழக்கின் வாதி எனது உடன்பிறந்த சகோதரன் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு உரிமைப்பட்ட சொத்தானது எத்தனை பங்காக பிரிக்கப்பட்டது என்றால் 5 பங்காக பிரிக்கப்பட்டடது. அதில் எனக்கும் வாதிக்கும் எவ்வளவு பங்கு கொடுக்கப்பட்டது என்றால் தலா 6 ¼ cent ஆகும். அது எந்தெந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்றால் சர்வே எண் 112/12 ல் 4 சென்டும், 112/13 ல் 2 ¼ சென்ட்ம் ஆகும். மேற்படி சொத்துக்கள் யாரது அனுபவத்தில் உள்ளது என்றால் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் அவரவர்கள் அனுபவத்தில் உள்ளது.

2. எனக்கும் வாதிக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் தான் நான் சொத்தை அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. பாக உடன்படிக்கையின் படி தான் நாங்கள் கிடைத்து அனுபவம் செய்து வருகிறோம். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதியின் சொத்தில் வாதியின் அனுமதியின்றி நான் வீடு அமைத்து அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாதியிடம் 1994 ல் 2 இலட்சம் ரூபாய் கொடுத்து வாய்மொழியாக பெற்று வாதியின் அனுமதி பெற்று பின்பு தான் வீடு அமைத்தேன். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. வாதிக்கு சர்வே எண் 112/13 ல் 2 ¼ சென்ட் சொத்து உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்து தாழ்வான பகுதியில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்து நான் கட்டியுள்ள வீட்டிற்கு பின்புறம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்திற்கு வாதி சி பட்டிகை சொத்து வழியாக மட்டுமே செல்லமுடியும் என்றால் சரியல்ல. அது என்னுடைய சொத்தாகும். எனக்கும் வாதிக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையின்

அடிப்படையில் நான் வீடு அமைத்து பாதை அமைத்து அன்றைய தேதியிலிருந்து தற்போது வரை சி பட்டிகைச் சொத்தை தான் பாதையாக பயன்படுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. நான் வாதி மேற்படி பாதையை பயன்படுத்தக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் KL.19A 1636 என்ற வாகனத்தை பாதையில் நிறுத்தி இடையூறு செய்கிறேன் என்றாலும், அதை நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. நான் மேற்கூறியவாறு தொந்தரவு செய்வதால் வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

4. நான் எனது முதல் விசாரணையில் 2 இலட்சம் ரூபாய் பெற்றுக்கொண்டு வாதி எனக்கு சொத்தை எழுதிக்கொடுக்கவில்லை என்ற விவரத்தை எனது எதிருரையில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் மேற்படி பாதையை வாதி பயன்படுத்தக்கூடாது என்றும் அதற்கு இடையூறு செய்யும் பொருட்டு தற்போதும் ஒரு வாகனத்தை நிறுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. அது என்னுடைய சொத்தாகும். 2 ம் பிரதிவாதிக்கு வலியவிளையில் 3,000 சதுர அடியில் ஒரு வீடு உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி பாதையானது எனக்கும் வாதிக்கும் உரிமைப்பட்டது என்றாலும், அதில் வாதி கோரியுள்ள உரிமை வாதிக்கு கிடைக்கத்தது என்றாலும் சரியல்ல.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**